பாடம் 5

# பொய்க் கிறிஸ்தவன்

***மேரியும் அஜயும் அழகிய கண்ணாடிக் குடுவை ஒன்றின் உள்ளே கூட்டுப்புழு ஒன்றை வளர்த்தனர். தேவையான உணவைக் கொடுத்து நல்லமுறையில் கவனித்து வந்தனர். அது ஒருநாள் அழகிய வண்ணத்துப் பூச்சியாக மாறிப் பறந்தபோது ஆச்சரியப் பட்டனர். பாவவாழ்வு வாழும் மனிதர்கள்கூட இயேசுவின் அன்பால் நல்லவராக மாறமுடியும்.***

பிலிப்பு என்னும் சீடரும் அப்போஸ்தலர்கள் நியமித்த ஏழுபேரில் ஒருவர் ஆவார். ஸ்தேவானோடு வல்லமையாக ஊழியம் செய்தவர்.

சமாரியாவிலுள்ள அந்தப் பட்டணம் இப்போது மிகவும் மாறிப்போயிருந்தது. ஏனெனில் மக்கள் இயேசுவின் செய்தியைக் கேட்டு மாறியிருந் தனர். பிலிப்பும் மிகவும் ஞான மாக, அருமையாக சமாரியா வில் உள்ளவர்களுக்கு இயேசு வைக்குறித்துப் பிரசங்கித்து வந்தார். இயேசுவின் நாமத்தில் அதிசயங்களைச் செய்தார். எனவே மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் பிலிப்புவின் பிரசங்கத்தைக்கேட்டனர்.

அநேகரிலிருந்த அசுத்த ஆவிகளும் மிகுந்த சத்தமிட்டு அவர்களை விட்டு ஓடிப் போயின. மேலும் அநேக திமிர்வாதக்காரர்களும் சப்பாணிகளும் குணமாக்கப் பட்டார்கள். அந்தப்பட்டணத் தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்துகொண்டு இயேவுக்காக வாழ அநேகர் தீர்மானித்திருந்தார்கள்.

அந்தப் பட்டணத்திலே சீமோன் என்னும் ஒரு மாய வித்தைக்காரன் இருந்தான். தான் மிகப்பெரிய ஒரு சக்தி என்று அவன் சொல்லிக்



## மனன வசனம்

**ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.**

**2கொரிந்தியர் 5:17.**

கொண்டான். சமாரியா நாட்டு மக்களைத் தனது மாயவித்தைகளினாலே பிரமிக்கப்பண்ணிக் கொண்டிருந்தான்.

மக்களும் அவனது மாய வித்தைகளினால் ஆச்சரியப்பட்டு அவனை மதித்து வந்தார்கள். இவ்வாறு அவன் அநேக காலமாய் சமாரிய மக்கள் மத்தியில் பிரபலமானவனாய் இருந்தான்.

ஆனால், இப்போது இயேசுவைப்பற்றிய மேலான செய்திகளும், தேவனுடைய ராஜ்யத்துக்கேற்ற செய்திகளும் சமாரிய மக்கள் மத்தியில் ஓர் அசைவை ஏற்படுத்தியிருந்தது. அநேகர் தங்கள் பழைய வழியை விட்டு தேவனுடைய பிள்ளைகளாக வாழ திருமுழுக்குப் பெற்றிருந்தனர்.

சீமோனும் பிலிப்புவின் பிரசங்கத்தைக் கேட்டான். பிலிப்பு செய்த அற்புதங்களையும், பேய்கள் ஓடுவதையும் கண்டான்; பிரமித்தான். தானும் ஞானஸ்நானம் எடுத்தான். பிலிப்புவின் கூடவே இருந்தான்.

சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதைக்குறித்து எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டார்கள். பேதுரு, யோவானை அங்கே அனுப்பிவைத்தார்கள். அந்தப் பட்டணத்தில் இருந்தவர்கள் ஞானஸ்நானம்மட்டுமே பெற்றிருந்தார்கள். பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கவில்லை. எனவே அம்மக்கள் மேல் கையைவைத்து ஜெபித்தார். அவ்வாறு ஜெபித்த உடனே பரிசுத்தஆவியைப் பெற்றனர்.

அச்செயலைக் கண்டு சீமோன் அசந்துவிட்டான். அடடா! இப்படிப்பட்ட வல்லமை கிடைத்தால் நிறைய சாதிக்கலாமே என்று எண்ணினான். எனவே, சட்டென்று சென்றவன் சற்று நேரத்திற்குள்ளாகப் பணமுடிச்சுடன்



## செய்தி

**தேவனைப்பற்றி அறிந்து, அவரை நம்பி, அவருக்குக் கீழ்ப்படிவது என்னுடைய வாழ்க்கையை மாற்றுகிறது.**

வந்தான். மிகுந்த உற்சாகத்துடன் பணத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலர்களிடம் நீட்டினான்.

‘‘நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவனும் பரிசுத்த ஆவியைப் பெறும்படிக்கு எனக்கு வரம் தாருங்கள்’’ என்றான்.

சீமோனின் வார்த்தைகள் பேதுருவை வேதனைப் படுத்தின. பேதுரு கோபத்துடன் அவனை நோக்கினார். ‘‘உன் பணம் உன்னோடே நாசமாய்ப் போகட்டும், தேவனுடைய வரத்தைப் பணத்தாலேயா சம்பாதிக்கப் பார்க்கிறாய்? உன் இதயம் செம்மையாக இல்லை’’ என்றபோது, சீமோன், ‘‘ ஐயோ நீங்கள் சொன்னபடி எதுவும் எனக்கு நேர்ந்து விடக்கூடாது எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள்’’ என்றான். என் பிரியமே! தேவன் மேலானவர் என்பதை ஒருபோதும் மறவாதே!

**செய்முறை:**

*பேதுருவும் யோவானும் பிலிப்புவும் இரட்சிப்பைக்குறித்துப் பிரசங்கித்ததை ஒருசிலர் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை. தேவனுடைய இரட்சிப்பு எத்தகையது என்பதைக் கண்டறிய, கீழே முக்கோணங்களில் உள்ள எழுத்துகளை அடித்துவிடு; பதிலைக் கோட்டில் எழுது.*

**புதிர் 5**

கி அ ரு க ை ட ப ர

______________________________

இ வ ல ா வ ல ச ந ம் ய

______________________________